1974 மார்ச் 29]

விற்பனை வரிச் சலுகைகள்

திரு. அ. அய்யணன் அம்பலம் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறு தொழில் பிரிவுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விற்பனை வரிச் சலுகைகள் அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) விற்பனை வரி குறித்த பொறுப்புகளை நிறைவேற்றவும், சிறு தொழில்களுக்கு மூலதனத்தைத் திரட்டுவதில் உதவவும், வட்டியில்லாக் கடன் தொகைகளை அளிப்பதன் மூலம் நிதிவகையில் உதவி அளிக்க விற்பனைவரி சீரமைப்பிற்கான தனி அதிகாரி பரிவுரை செய்துள்ளார். இப்பரிவுரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இவ்வினு எழுவில்லை.

Tamil Nadu Bristle Fibre Unit

* @ 228 *Q*.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Bristle Fibre Unit has started marketing its products;

(*b*) if so, the details thereof;

(*c*) whether any survey has been undertaken about the market for its products; and

(*d*) if so, the details thereof?

@ 27—3—1974-ஆம் நாள் வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்

[1974 மார்ச் 29

தமிழ்நாடு பன்றி உரோமத் தொழில் பிரிவு

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பன்றி உரோமத் தொழில் பிரிவு தனது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கிவிட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இத்தொழில் பிரிவின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை குறித்து ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தென்காசியிலுள்ள அரசு நுண்கயிறு நிறுவனம் 1968 ஆம் வருடம் ஜூன் திங்கள் உற்பத்தி ஆரம்பித்து விற்பனை செய்யத் தொடங்கிற்று. உற்பத்தியும் விற்பனையும் 1968-69ல் முறையே ஆறு டன்னுகவும், இரண்டு டன்னுகவும் இருந்தது. 1972-73-ல் 61.4 டன்னுகவும் 65.8 டன்னுகவும் உயர்ந்தது.

(உ) & (எ) இதைப்பற்றிய ஆய்வு எதுவும் அண்மையில் நடைபெற வில்லை. இருப்பினும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் உண்டு எனக் கண்டு பிடிக்கப்பட்ட காரணத்தினாலேயே இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை வளர்ப்புக் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதம்.

*** மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, "இம்மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள, வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை வளர்ப்புக் கொள்கை விளக்கக் குறிப்புகள் @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

@ 89-194-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.